RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s721

OPEN ACCESS

# செல்லாத பணம் நாவலில் பெண்களின் வாழ்வு

## நா. காயத்ரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக் கல்லூரி, நிலக்கோட்டை, திண்டுக்கல்-624208, தமிழ்நாடு, இந்தியா.

# Sellatha Panam Novel about Women's Life

## N. Kayathri [a, *]

[a] Department of Tamil, Government Arts College for Women, Nilakottai, Dindigul-624208, Tamil Nadu, India

* Corresponding Author: kayathri250381@gmail.com

Received: 08-12-2021
Revised: 19-04-2022
Accepted: 02-05-2022
Published: 29-07-2022

**ABSTRACT**

Patriarchal social formation is the result of the surplus product after individual labor evolved from collective labor. Cultural institutions such as family and marriage were formed as a result of property ownership. A woman's adaptation in the family system depends on the man. A man is dominant. The woman is the source of such a family system. She can earn her family's reputation. Women like Revathi, Amaravathi, Kokila, Arunmozhi are the source of family organization in the novel Sellatha Panam. Revathi is the one who goes astray. Worried about her, Amaravathi and Arunmozhi deny her actions and try to keep the family away from trouble. But Revathi doesn't agree with their views and takes her own decision and marries Ravi. This makes her life miserable and restless. Later she gets injured in a fire accident and is treated in a hospital. In the end she dies because the treatment does not work. The novel shows that the woman who is the breadwinner of the family will take arbitrary decisions which will be detrimental.

**Keywords:** Patriarchal Society, Sellatha Panam, Family, Marriage, Love

## முன்னுரை

மனித வாழ்வானது கூட்டு உழைப்பிலிருந்து தனி உழைப்பாக மாறிய நிலையில் உடைமைச் சமூகமாக மாறியது என மானிடவியலார் கூறுகின்றனர். உடைமைச் சமூகத்தில் ஆண்களின் வாழ்வு வெளியுறவுகளோடும் பெண்ணின் வாழ்வு குடும்பத்தோடும் பிணைக்கப்பட்டது. ஆணுக்கு இல்லாத கட்டுப்பாடுகள் பெண்களுக்குப் பண்பாடு என்ற பெயரில் ஏற்றப்பட்டன. பெண்கள் வீட்டுப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதும் கணவனின் சொற்களைத் தட்டாது செய்வதிலும் முழுமையைக் காண்கிறாள். மனைவி, மகள், தாய் என்னும் உறவுகள் ஆணுக்குச் சேவை செய்பவர்களாகவே வாழ்வை அமைத்துக் கொள்கின்றனர். மனைவியாக கணவனுக்கு ஆற்ற வேண்டிய பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதுதான் குடும்பப் பெண்ணின் தலையாயக் கடமை என வலியுறுத்தப்படுகிறது. காதல் உறவுகள் மறுக்கப்படும் நிலையில் பெண்ணின் செயல்பாடுகள் ஒடுக்கப்பட வேண்டியன எனப் பொதுச்சமூக உளவியல் கட்டமைக்கப்படுகிறது. தந்தை, தாய் ஆகியோரை எதிர்த்துத் தான் விரும்பியவனையே மணக்கும் பெண் சீரழிவான வாழ்வை அடைவாள் என்னும் போக்கு மக்களிடம் இருக்கிறது. சமீபக் காலத்தில் பெண்கள் குடும்பத்தாரால் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டும் வருகின்றனர். சாதி, சமய ஏற்றத் தாழ்வுகள் தந்தைமைச் சமூகத்தில் மிக இன்றியமையாதனவாகக் கடைபிடிக்கப்படுகின்றன. அந்த வகையில் பெண்ணின் வாழ்வு குடும்ப அமைப்பிற்குள்ளும் பொது சமூக நீரோட்டத்திலும் கடும் ஒடுக்குமுறைக்கு உள்ளாவதைக் காணமுடிகிறது. தமிழ் நாவல் வரலாற்றில் விளிம்பு நிலையினரைப்

பிரதிநிதித்துவப்படுத்தும் இமையத்தின் நாவல்களில் ஒன்றான செல்லாத பணம் என்பதில் பெண்ணின் வாழ்வு அமையும் விதம் குறித்து இக்கட்டுரை அமைகிறது.

## இமையத்தின் செல்லாத பணம்

எழுத்தாளர் இமையம் தனது படைப்பான செல்லாத பணம் நாவலை 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எழுதி வெளியிட்டார். இவருடைய நாவல்கள், படைப்புகள் அனைத்தும் க்ரியா பதிப்பகத்தின் மூலம் வெளிவருவனவாகும். இவருடைய தலைச்சிறந்த படைப்பான கோவேறு கழுதைகள் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினருக்குள் இருக்கும் உள் ஒடுக்குதலை வெளிப்படுத்தியதாகும். பணமதிப்பிழப்பு நடவடிக்கை எடுக்கப்பட்ட ஆண்டிற்குப் பின்னர் வெளிவந்த நாவல் ஆதலின் இந்த நாவல் அதைப் பற்றியதாக இருக்கும் என்ற கணிப்பு பலருக்கும் இருந்தது. ஆனால் தந்தைமைச் சமூகத்தில் பெண் தனக்கான வெளியை உருவாக்கிக் கொள்வதில் இருக்கும் சமூக எதிர்வினையாகவே இந்த நாவல் அமைந்துள்ளது. காதல் திருமணம் செய்து கொண்டு பெற்றோரை எதிர்த்து வாழும் பெண் வாழ்வில் நிறைவை அடையாமல் தீயினால் கருகி இறந்து போகும் நிலைக்கு ஆளாகிறாள். அவளது உடல் மருத்துவமனையில் இருக்கும் போது தாய், தந்தை, கணவன், உறவினர்கள் அனைவரும் மருத்துவமனையில் இருக்கின்றனர். எவ்வளவு பணம் செலவழித்தும் தன் மகளைக் காப்பாற்றி விட வேண்டும் என்ற முனைப்பு கொண்ட தந்தையின் எதிர்பார்ப்பைக் குலைத்து இறந்து போகிறாள் ரேவதி. எவ்வளவு பணம் இருந்தாலும் இறப்பின் விளிம்பில் இருப்பவரை காப்பாற்றாத நிலையில் அது செல்லாத பணமாக இருக்கிறது எனக் கதை முடிவடைகிறது. இதில் பெண் எடுக்கும் முடிவுகள் தவறானவை என்பதே போதனை செய்யப்படும் கருத்தாக அமைகிறது. அது பலரின் உரையாடல்கள் வழி வெளிப்படுகிறது. செல்லாத பணம் நாவலுக்காக இமையம் 2019 ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருது பெற்றார் (Imayam, 2018).

## குடும்ப அமைப்பில் பெண்

நிலையான ஓர் அமைப்பாக இந்தியச் சமூகத்தில் கருதப்படும் அமைப்பு குடும்பம் ஆகும். குடும்பத்தின் பல்வேறு வளர்ச்சி நிலைகள் குறித்து மானிடவியல் ஆய்வுகள் காணப்படுகின்றன. மனிதனைச் சமூகவயப்படுத்தும் அமைப்பாக குடும்பமே திகழ்கிறது. திருமணம், குடும்பம் இரண்டும் ஒன்றிணைந்தே காணப்படும் எனப்படுகிறது. திருமணம் என்ற நிகழ்வினால் குடும்பத்திற்குள் கொண்டு வரப்படுபவளாகப் பெண் நிலவுடைமைச் சமூகத்தில்தான் மாறுகிறாள். தந்தை வழி அழைத்தல் என்னும் நிகழ்வு சொத்துடைமைக்கு ஆதாரமாக அமைகிறது. அதற்கு முந்தைய தாய் வழி அழைத்தல் என்பது தந்தையை அடையாளம் காண வழி செய்வதில்லை. எனவேதான் திருமணம் என்னும் நிறுவனம் மூலம் பெண் குறிப்பிட்ட ஆணுக்குரியவள் என்று தீர்மானிக்கப்படுகிறது. "குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே. குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன" என்று குறிப்பிடுவதன் மூலம் தந்தைமைச் சமூகத்திற்கு குடும்ப அமைப்பும் திருமணமும் இன்றியமையாததாக விளங்குவது கூறப்படுகிறது (Baktavatchala Bharathi, 2014). திருமணத்தின் அடிப்படைப் பண்பே இனவிருத்தியாகும். அது தன் சொந்தச் சாதிக்குள் நிகழ வேண்டும் எனக் கருதுவது குடும்பத்தின் முதன்மையான பிரச்சினையாக மாறுகிறது "இத்தகைய மனைவி, மனைக்கிழத்தி, இல்லாள் என்ற தகுதியை அவள் வதுவை வழியாகப் பெற்றாள். இவ்விதத்தில் வதுவை என்ற சமூக வைபவமும் அதன் சடங்குகளும் பெண்ணின் இனவிருத்திச் செயல்பாட்டிற்கு இன்றியமையாததாகப் போற்றப்பட்டு வந்துள்ளன" என்னும் கூற்று குடும்ப அமைப்பின் இன்றியமையாத பணியான இனவிருத்தி பற்றிக் கூறுகிறது (Raj Gowthaman, 2006). உடைமைச் சமூகத்தில் பெற்றோரில் தந்தையே ஆதிக்கம் செலுத்தக் கூடியவராக இருப்பார். தாய், மகள் ஆகியோரைத் தன் ஆளுகையின் கீழ் வைத்திருப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பார். "சங்க காலத்திலிருந்து இக்காலம் வரை பெண்களின் கருத்து வெளிப்பாடுகள், வாழ்வியல் மதிப்பீடுகள், பண்பாட்டு அடையாளங்கள் என்பன ஆணாதிக்கச் சிந்தனையாலேயே வரையறுக்கப்பட்டுள்ளன" என்று கூற்று குடும்பத்திலும் சமூகத்திலும் பெண் பெறுகின்ற இடமானது ஆணின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதை உணர்த்துகிறது

(Arokia Seeli, 2015). குடும்ப அமைப்பின் கணவனுக்கு அடங்கிய பாத்திரமாகவே இருக்க வற்புறுத்தப்படுகிறார்கள். கற்பினைக் கடைபிடித்து கணவனுக்குப் பணிவிடை செய்யும் விதத்தினராகவே இன்றைக்கும் பெண்கள் உள்ளனர்.

## செல்லாத பணம் நாவலும் ரேவதியின் பாத்திரமும்

இமையத்தின் இந்த நாவலில் ரேவதி முதன்மைப் பாத்திரமாக இருக்கிறாள். ஓர் இடைநிலைச் சாதியைச் சார்ந்த குடும்பத்தில் பிறந்தவளாகக் காணப்படுகிறாள். அவளது தந்தை ஆசிரியர். தாய் குடும்ப நிர்வாகியாக இருப்பவள். இவர்களுக்கு மிகுதியான உறவினர்கள் இருக்கின்றனர். அவள் கல்லூரி படிக்கும் போது அவளது செயல்பாடுகளைக் குறித்து தாய் சந்தேகம் கொள்வது கூறப்படுகிறது. தன் மகள் ஒருவனைக் காதலிப்பதை அறிந்து மனம் பதறுகிறாள். அவனிடம் இது ஒத்து வராது என்று கூறுமாறு கேட்கிறாள். அமராவதி என்னும் அவளது தாயின் உரையாடல்

"அவன எங்க பாத்த எப்பிடிப் பழக்கம் என்று வரிசையாகக் கேட்டாள். அமராவதி ஒவ்வொரு கேள்வியைக் கேட்கும் போதும் சார் என்றே வார்த்தையை வேண்டுமென்றே பயன்படுத்தினாள். சார் என்ற வார்த்தையை எவ்வளவு கீழ்த்தரமாகச் சொல்ல முடியுமோ அவ்வளவுக் கீழ்த்தரமாகப் பயன்படுத்தினாள். எதற்கும் வாயைத் திறக்காத ரேவதியைப் பார்த்து இதொன்னும் ஒலக அதிசயமில்ல. எங்க வீட்டுல ஒத்துக்க மாட்டங்குறாங்கன்னு அந்தப் பையன்கிட்ட சொல்லிடு. பிரச்சன முடிஞ்சிடும் சொல்றியா என்று அமராவதி கேட்டாள். ரேவதியிடமிருந்து சிறு சத்தம் கூட வரவில்லை" என்னும் பகுதியில் அமராவதி என்னும் குடும்பத் தலைவிப் பாத்திரம் தன் மகள் ஒருவனைக் காதலித்தாள் என்பதை ஒப்புக் கொள்ள முடியாதவள் (Imayam, 2018). ஆயினும் நாகரிக சமூகத்தில் இது இயல்பானது என்ற முடிவிற்கு தானே வருகிறாள். தன் குடும்பத்திற்கு ஒத்து வராது என்ற சொற்களைக் கூறுவதன் மூலம் சாதிய ஏற்றத் தாழ்வு இருப்பதைக் காணமுடிகிறது.

ஆணியச் சமூகத்தில் குடும்பத்தின் தலையாயக் கடமையே பெண்ணைத் தன் சாதிக்குள் களங்கமில்லாமல் திருமணம் செய்து கொடுத்தல்தான் எனக் கூறுகிறார் (Malathi Maitri, 2009). அப்படியான ஒரு மனநிலை உடைமைச் சமூக ஆணியக் கருத்தியல்களால் பெண்ணுக்குள் ஏற்றப்பட்டு இருக்கின்றன.

## ரேவதியும் காதலும் பெற்றோரின் அவஸ்தையும்

இந்நாவலில் ரேவதியின் தாய், அவளது தோழி, உறவினர்கள் ஆகியோரால் மனம் மாற்றப்பட முயற்சிகள் நடக்கின்றன. அமராவதியும், நடேசனும் அவளது காதலனான ரவியின் வீட்டிற்குச் சென்று அவளை விட்டு விடும்படிக் கூறுகின்றனர். ரவியின் அக்கா கோகிலா அவர்களுக்கு மறுப்பாக அவர்களுடைய பெண்ணைத்தான் அடக்கமாக வளர்க்கவில்லை என்று கூறுகிறாள். அமராவதி அதற்காக கோவித்துக் கொள்கிறாள் "கோகிலா அமராவதியை நேருக்கு நேர் பார்த்து ஒங்க பொண்ணுக்கிட்டயும் ஒரு வாத்த சொல்லிவைங்க என்று சொன்னதும் அமராவதிக்குத் தலைகால் புரியாத அளவுக்குக் கோபம் உண்டாயிற்று. எம்பொண்ணுதான் திமிர் எடுத்து அலையுறாளா சத்தமாகக் கேட்டாள். நான் அப்படி சொல்லல பொட்டச்சி எடம் கொடுக்கலன்னா எந்த ஆம்பளதான் என்ன செய்ய முடியும்ன்னுதான் சொன்னன். கோகிலாவின் சமாதானப் பேச்சை அமராவதி கேட்கவில்லை. முன்பை விட சத்தமாகவும் கோபமாகவும் ஆத்திரம் பொங்கச் சொன்னாள். ராவும் பகலும் ஓயாம தொந்தரவு செஞ்சா ஒரு பொண்ணு என்னதான் செய்வா? பொட்டச்சி மனசு எரக்கப்பட்ட மனசுதான? வளப்பு சரியா இருந்தா எல்லாம் சரியா இருக்கும் என்று அழுத்தமாகச் சொன்னாள்" என்ற உரையாடல் ரேவதியின் காதலால் அவளுடைய பெற்றோர் காதலனனின் வீட்டிற்குச் சென்று அவர்களிடம் எல்லாம் பேசுகிறார்கள் (Imayam, 2018). பெண்ணை வளர்க்கத் தெரியாமல் வளர்த்ததாக கோகிலா கூறவும் ஆணின் ஒழுங்கு பற்றிக் கேள்வி எழுப்புகிறாள் ரேவதியின் தாய் அமராவதி. அவர்களுக்குள் எவ்வித சமாதானமும் ஏற்படவில்லை.

## காதல் குறித்து பெற்றோரின் கவலை

ஆண்கள் காதலிப்பது குறித்து அவனுடைய பெற்றோரோ உறவினர்களோ யாதொரு கவலையும் கொள்வதில்லை. ஆனால் பெண்ணின் காதல் குறித்து மிகுந்த கவலை கொள்வதனை நடேசன், அமராவதி ஆகியோரின் செயல்பாடுகள் சுட்டுகின்றன. நடேசன் ரேவதியுடன் பேசுவதை நிறுத்தி விடுகிறார். அவள் மேல் கோபித்துக் கொண்டு இவ்வாறு செய்வதால் அவள் மனம் திரும்பி விடுவாள் என்று எண்ணுகிறார். ஆனால் ரேவதி தான் பிடித்த பிடியில் ரவியைத்தான் திருமணம் செய்வேன் என்று கூறுகிறாள். அவளுக்குக் கிரகம் சரியில்லை. அதனால்தான் இவ்வாறு நடந்து கொள்கிறாள் என்று கருதுகின்றனர் "கிரகக் கோளாறாக இருக்குமோ என்று அமராவதி சந்தேகப்பட்டாள். அப்படித்தான் இருக்க வேண்டும். காலேஜில் படித்து விட்டு வரும் வரை தங்கம் என்று பெயர் எடுத்த பெண்ணுக்குத் தங்கியிருந்த வீட்டில் தங்கியிருந்த ஒன்றிரண்டு மாதங்களில் புத்தி ஏன் தடுமாறிப் போயிற்று கிரகக் கோளாறுதான் காரணம் என்றால் பரிகாரம் செய்து நிவர்த்தி செய்து விடலாம்" என்ற கூற்று பெண்ணின் அறியாமையை வெளிப்படுத்துவதாக அமைகிறது (Imayam, 2018). ஏமாற்றப்படும் பெண்ணாக ரேவதி அவள் ஏமாறுவதற்குக் காரணம் கிரக நிலை என்று கவலைப்படும் தாய் என நாவலில் இரு வகையான பெண்கள் இருக்கிறார்கள்.

சங்க காலம் முதல் பெண் காதலில் ஈடுபடுவதைப் பெற்றோர் அனுமதித்தது இல்லை. களவுக் காதல் குறித்த அச்சம் பெண்ணுக்கும், தோழிக்கும் தாய்க்கும் இருப்பதைக் காணலாம். அது போல்தான் நாவலில் அமராவதியின் அச்சமும் காணப்படுகிறது (Imayam, 2018). ரேவதியைக் கண்காணித்து அவளது செயல்களை நேர் செய்ய போராடுகிறாள்.

## ரேவதியின் தோழியால் மனம் மாற்ற முயற்சி

கல்லூரியில் படிக்கும் போது அவளுடைய தோழியால் அவளுக்கு அறிவுரை கூறப்படுகிறது. ஆனால் எதையும் ரேவதி காதில் வாங்கிக் கொள்ளாமல் இருக்கிறாள். அவளது தோழி அருண்மொழி அவளிடம் கூறுகிறாள்" நீ செய்யுறதில ஏதாவது லாஜிக் இருக்கா ஆளு சிவப்பா, வாட்டமா இருக்கான்கிற ஒரே காரணத்துக்காக ஒருத்தனக் காதலிக்க முடியுமா? கல்யாணம் கட்டிக்க முடியுமா, நீ செய்யுறது நம்ப சாதிக்கே அசிங்கம் என்று சொன்னாள். - சாதி இங்க எங்க வந்திச்சி - தமிழ் நாட்டுல சாதி இல்லாம எது இருக்கு? எது நடக்குது? - ரேவதி பதில் சொல்லவில்லை. - நல்லா படிக்கிறது மார்க் எடுக்கறது மட்டுமே புத்திசாலித் தனமில்ல. ஒன்னோட முகம் எப்படியிருக்குன்று கண்ணாடியில பாத்தியா? - ரேவதி பதில் சொல்லவில்லை. தமிழ் சினிமாவைப் பார்த்து கெட்டுப் போயிருச்சு…" என்று கூறுகிறாள் (Imayam, 2018). மேலும் அவளுக்கு அறிவுரை கூறும் அருண்மொழி கூட முருகனைக் காதலிக்கிறாள். முருகன் ரவியின் அண்ணன். அவளது காதல் விவகாரம் தெரிந்ததும் கோபித்துக் கொண்டு சென்னை சென்று விட்டான் எனக் கூறப்படுகிறது. தங்கையின் காதல் குடும்பத்திற்கு இழிவைத் தரும் என்று கருதுகிறான். ஆனால் அவன் காதலிப்பது மட்டும் பிரச்சினையில்லை என்பது போலக் கூறப்படுகிறது. "நீ செய்யுற மாதிரி ஒங்கப்பா செய்யுற மாதிரி நானும் ஒதுங்கிப் போயிட்டா ஒன்னோட, அப்பாவோட மானம் போற மாதிரி ஏதாச்சும் நடந்திடுமோன்னு பயப்படுறேன் என்று சொல்லும் போதே அமராவதிக்கு அழுகை வந்து விட்டது. ஓடிப் போனா போவட்டும். சனியன் தொலையட்டும். கரும காரியம் செஞ்சிடலாம் என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னான் முருகன். நம்ப குடும்ப மானம் போயிடுமே அசிங்கமா இருக்கு என்று சொல்லி தலையில் அடித்துக் கொண்டான் முருகன்.

## ரேவதியின் திருமண வாழ்வு

தான் பிடித்த பிடியில் ரவியைத் திருமணம் செய்து கொண்டாள் ரேவதி. அவள் திருமணமாகி சென்ற பின்னால் அவ்வப்போது வீட்டிற்கு வருவாள். ரவி தன்னைக் கொடுமைப்படுத்துவதாகக் கூறுவாள். "கல்யாணமாயி முத ஏழெட்டு மாசம் பேச்சு வாத்த இல்ல. குழந்த உண்டானதும் ஆஸ்பத்திரி செலவ யாரு பாக்கறதுன்னு கேட்டு அடிச்சான். தகவலு தெரிஞ்சி நான்தான் போயி

ஆஸ்பத்திரியில சேத்தன். புள்ளையோடதான் எங்க வீட்டுக்கு வந்தா. எங்க சார் பேசல. பத்து நாளு வச்சிருந்து. அனுப்பிவுட்டன். ரெண்டாவது புள்ளைக்கும் துரத்திவுட்டுட்டான். நான்தான் ஆஸ்பத்திரிக்கு அழச்சிக்கிட்டுப் போனன் அப்ப வந்து ஒரு பத்து நாளு இருந்தா. அப்பயும் ஒங்க ஊட்டு சனங்க பேசலியா - இல்ல- சரிதான்- அதுக்குப் பின்னால எப்பியாச்சும்தான் வருவா போவா. எப்ப வந்தாலும் சர்னு வீட்டுக்குள்ளாற வர மாட்டா. வாசல்லியே அப்பா இருக்காறா அண்ணன் இருக்கானான்னு பாத்துக்கிட்டு நிப்பா. நான்தான் எதுக்கு வாசல்லியே நிக்குறன்னு கேப்பன். அதுக்குப் பின்னாலதான். உள்ளார வருவா வந்தாலும் ஒடனே போறன் போறன்னுதான் நிப்பா. ஒக்காந்து சாப்புடக் கூட வுட மாட்டன். கா மணி நேரம் ஆளக் காணுமின்னா ஒடனே ஆட்டோவைத் தூக்கிக்கிட்டு வந்து வாசல்ல நிப்பான்" அவளுடைய திருமண வாழ்வு மகிழ்ச்சியாக இல்லை என்பது கூறப்படுகிறது (Imayam, 2018). இதன் மூலம் சொத்துடைமைச் சமூகத்தில் பெண் தன்னிச்சையாகத் தனக்குப்பிடித்தவனைத் திருமணம் செய்வது குடும்ப விரோதம் ஆகும். அதனைச் செய்வதால் அவளுக்கு மகிழ்ச்சியான வாழ்வு கிடைக்காது. மாறாக கணவனால் துன்பத்தை அனுபவிப்பாள் என்று கூறுவதாகக் கொள்ளலாம். ரவி, ரேவதியை எங்காவது வெளியில் சென்று சிறிது தாமதமாக வந்தால் கூட அடிப்பான் என்று கூறப்படுகிறது.

## ரேவதியின் முடிவு

சொத்துடைமைச் சமூகமானது பெண்ணையே தனக்குள் அகவயப்படுத்திக் கொள்ள விரும்புகிறது. சாதிய அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகளை ஒப்புக் கொள்ளாததாகவே குடும்ப அமைப்பு தொழிற்படுகிறது. அந்த அடிப்படையில்தான் நாவலில் ரவி அடித்தட்டு இனத்தவனாகக் காட்டப்படுகிறான் (Imayam, 2018). அவனது குடும்பம் பர்மாவில் புலம்பெயர்ந்து வந்ததாகக் கூறப்படுகிறது. புலம்பெயர்ந்து வந்தவர்களின் நிலைமை மிகக் கீழ்மையானதாக இருப்பதாக அவனுடைய அக்கா கோகிலா அமராவதியிடம் கூறும்போது சொல்கிறாள். இந்தியாவிற்கு வந்ததால்தான் தாம் பிச்சைக்காரர்கள் ஆகி விட்டோம் என்று கூறுகிறாள். சாதிய அடிப்படையில் அவன் கீழ்மையானவன் என்பதை அருண்மொழியும் ரேவதிக்குச் சுட்டுகிறாள். யாருடைய பேச்சையும் கேட்காமல் அவனைத் திருமணம் செய்தாள். நாளொரு மேனியும் அவளைக் கொடுமைப்படுத்தினான். அவள் ரவி மீது மரண வாக்குமூலம் கொடுத்தால் அவனைப் பிடித்துக் காவல் துறையினர் சிறையில் அடைப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் அவள் தான் தீக்காயம் ஏற்பட்டதற்கு ரவி காரணமல்ல என்று கூறி விடுகிறாள். வீட்டில் சமைக்கும் போது ஓர் அசம்பாவிதம் நடந்து தீப்பிடித்து விட்டது என்று கூறுகிறாள். நாவலாசிரியர் ஒரு பெண்ணின் தன்னிச்சையான முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. மருத்துவமனையில் கிடக்கும் ரேவதியை அவளுடைய உறவினர்கள் பார்த்துக் கொள்கின்றனர். ஆனால் 70 சதவீதத்திற்கும் மேலாக தீக்காயம் இருக்கும் போது பிழைக்க வைப்பது கடினம் என்ற நிலையில் அவள் இறந்து போய் விடுகிறாள். அவளது பிணத்தைக் கண்டு அனைவரும் அழுகின்றனர். அந்த மருத்துவ மனையில் "காலயிலேயிருந்து இதுவரைக்கும் ஏழு பொணம் போயிருக்கு என்று லட்சுமி சொல்லிக்கும் கொண்டிருக்கும் போது காட்டு நெமிலி லலிதா பாடிய வாங்குறவங்க வாங்க என்று பிரேத பரிசோதனை அறையிலிருந்து வெளியே வந்த ஆள் சொன்னான். உடனே ஏழெட்டுப் பேர் கொண்ட கூட்டம் பிரேத பரிசோதனைக் கூடத்துக்கு ஓடியது" என்று கூறப்படும் செய்தியானது நாள்தோறும் பெண்கள் திருமணம் செய்து கொடுத்த வீட்டில் தீக்குளிப்புக்கு உள்ளாகிறார்கள் என்பது புலப்படுகிறது (Imayam, 2018). பெண்கள் குடும்பத்தின் வரையறைகளைக் கடைபிடிக்காதபோது இவ்வாறு அற்ப வயதில் இறக்க நேரிடுகிறது எனக் கொள்ளலாம். அதாவது இந்த நாவலின் நோக்கம் குடும்ப அமைப்பை வலுப்படுத்துவதாக அமைகிறது. குடும்ப அமைப்பிற்கு இன்றியமையாத பெண்கள் கட்டுப்பாடுகளைக் கடைபிடித்துப் பெற்றோரின் வழி தம் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் இவ்வாறு பாதி வயதில் முடிவு நேரும் என்று கூறுவதைப் போல அமைகிறது.

## முடிவுரை

பெண்கள் சமுதாயத்தில் பாதியாக இருக்கின்றார்கள். தமிழ் இலக்கியப் பரப்பில் பெண் பாத்திரங்கள் தொடக்க காலத்திலிருந்து குடும்ப அமைப்பின் இன்றியமையாத பாத்திரங்களாக இருந்து வருகின்றனர். இந்நாவலில் வரும் பெணகள் யாவரும் குடும்ப அமைப்பினைப் பேணுபவர்களாக இருக்கிறார்கள். அதை மீறிச் செல்பவர்கள் சந்திக்க நேரும் அசம்பாவிதமே ரேவதியின் முடிவாகச் சுட்டப்படுகிறது. அமராவதி நடேசனின் அம்மா குடும்பத்திற்குத் தலைவியாகத் தன் கடமையைச் செய்கிறாள். திருமணம் செய்து போன மகள் திரும்பி வரும் போது ஆதரிக்கிறாள். ஆண்கள் அவளை ஏற்பதில்லை. அவள் இறக்கும்போது அனைவரும் அழுகிறார்கள். அவர்கள் வைத்திருந்த பணம் ஒன்றுக்கும் பயனில்லாமல் போகிறது எனக் கூறுவதாக இருந்தாலும் பெண்கள் குடும்ப அமைப்பிலிருந்து வழுவக் கூடாது என்பது வலியுறுத்தப்படுகிறது எனலாம்.

## References

Arokia Seeli, A., (2015) Pen Than Varalatru Pathivukal, New Century Book House, Chennai, India.

Baktavatchala Bharathi, (2014) Ilakkiya Manudaviyal, Adaiyalam Publications, Chennai, India.

Imayam, (2018) Sellatha Panam, Kriya Pathippagam, Chennai, India.

Malathi Maitri, (2009) Nam Thanthayarai Kolvatheppadi, Pulam Veeliyeedu, Chennai, India.

Raj Gowthaman, (2006) Paattu Thogaiyum Tholkaappiyamum Tamil Samoogamum, Tamizhini, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License